**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை :- திருமதி.Dr.R.லதா M.A., M.L., Ph.D.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், வைகாசி 26 ஆம் நாள்**

**M.P.No.06/2026**

**in**
**C.C..No.620/2025**

Union of India,
Rep by Drugs Inspector,
CDSCO South Zone,
Vepery Chenai … புகார்தாரர்

// Vs //

1) M/s.Skymap Pharmaceuticals Pvt.Ltd
Rep by its Directors

2) Mr.Kishori Lal Gupta

3) Mr.Sanjay Gupta

3) Shri.Akshaya Kumar chauhan 1 முதல் 4 எதிரிகள்

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:58:54 +0530

இம்மனுவானது 26.05.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டேவிட்சன் ஜே ஆம்புரோஸ் அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் கற்றறிந்த மத்திய அரசு வழக்கறிஞர் திரு.N.சங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இன்று (09.06.2026) இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

2 வது எதிரி தரப்பில் U/s.262 BNSS, 2023 ன்படி 2 வது எதிரி 1 வது எதிரி நிறுவனத்தில் இயக்குநராக பணிபுரிந்து அப்பதவிலியிருந்து விலகிவிட்டதால் புகார்தாரரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து 2 வது எதிரியை நீக்கரவு செய்து உத்தரவிடவேண்டி இந்த மனு வது எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனு உரை சுருக்கம்**

**1.1)** மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 (Drugs and Cosmetics Act, 1940) பிரிவு 16 உ/இ பிரிவு 18(a)(i)-ன் கீழ் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு, பிரிவு 27(d)-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளதாக தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.2)** 2 வது எதிரி M/s. Skymap Pharmaceuticals Pvt Ltd' என்ற நிறுவனத்தின் இயக்குநர் பதவியிலிருந்து 09.10.2016 அன்று விலகியுள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:03 +0530

09.10.2016 முதல் அந்நிறுவனத்தின் இயக்குநராக 2வது எதிரி பதவியில் இல்லாததால், அதன்பிறகு உள்ள காலகட்டத்தில் அந்நிறுவனம் செய்த குற்றங்களுக்கு 2வது எதிரி எந்த வகையிலும் பொறுப்பல்ல. (இயக்குநர் பதவியிலிருந்து விலகியது தொடர்பான 09.10.2016 தேதியிட்ட கடிதத்தின் நகல், விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான 10.10.2016 தேதியிட்ட கடிதத்தின் நகல் மற்றும் 09.10.2016 முதல் இயக்குநர் பதவி முடிவுக்கு வந்தது தொடர்பாக கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தால் (Ministry of Corporate Affairs) முறையாகக் கையொப்பமிடப்பட்ட 'படிவம் DIR-12'-ன் (FORM No. DIR-12) நகல் ஆகியவையும் குறிப்பாணையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)

1.3) மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 34-ல் நிறுவனங்களால் செய்யப்படும் குற்றங்கள் குறித்துக்

> ***Offences by companies:-*** *(1) Where an offence under this act has been committed by a company, every person who at the time the offence was committed, was in charge of and was responsible to the company for the conduct of the business of the company, as well as the company shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly: Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment provided in this Act if he proves that the offence was committed without his knowledge or that he exercised all due dilligence to prevent the commission of such offence.*
>
> *Not with standing anything contained in sub-section where an offence under this act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer*

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:08 +0530

*shall also be deemed to be guilty of that offence ans shall be liable to be proceeded against and punsihed accordingly.*

***(a)*** *Company means a body corporate, and includes a firm or ther association of individuals: and*

***(b)*** *director in relation to a firm means a partner in the time*

என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி Drugs and Cosmetics Act,1940'-இன் பிரிவு 34-ஐக் கருத்தில் கொண்டு 09.10.2016 அன்று 1ம் எதிரியான மருந்து அந்நிறுவனத்திலிருந்து 2 வது எதிரி இயக்குநர் பதவியிலிருந்து விலகிவிட்டார் எனவும், அதன் பிறகு அந்நிறுவனத்தின் இயக்குநராக 2 வது எதிரி செயல்படவில்லை என்பதால் 2 வது எதிரியின் பதவி விலகலுக்குப் பிறகு அந்நிறுவனத்தால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு 2 வது எதிரி எந்த வகையிலும் பொறுப்பல்ல.

**1.4)** 2 ம் எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட State of Haryana Vs Brij Lal Mittal & Others' (AIR 1998 SC 2327) என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, ஒரு நிறுவனம் குற்றம் இழைக்கும்போது, அக்குற்றம் நிகழ்ந்த நேரத்தில் அந்நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவராக அல்லது நிர்வாகத்தை மேற்பார்வையிடுபவராக இருந்த இயக்குநரோ அல்லது நபரோ, அந்நிறுவனத்துடன் சேர்த்து அக்குற்றத்தைச் செய்தவராகவே கருதப்படுவார்; மேலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:14 +0530

எடுக்கப்பட்டு தண்டிக்கப்படவும் வாய்ப்புள்ளது என்பது தெளிவாகிறது.

1.5) மேலே குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளின்படி, 2 வது எதிரி இயக்குநர் பதவியை ராஜினாமா செய்துள்ளதால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட காலத்தில் 2 வது எதிரி பொறுப்பில் இல்லாததால் அந்த குற்றச்சாட்டிலிருந்து 2 வது எதிரியை நீக்கி விடுவித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரரான அரசுத்தரப்பில் விரிவானதொரு எதிருரை தாக்கல் செய்யவில்லை. மனுவுரையின் முகப்பில் Objection subject to maintainability may pass suitable order என மேலெழுதப்பட்டுள்ளது.

3) **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்** -

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4) அரசுத்தரப்பில் குற்றப்புகாரானது பிரிவு 210(1)(a) & 233 (1) of BNSS ன்கீழ் தனிப்புகாராக u/s.18(a)(i) r/w Sec.16 punishable under section 27(d) Drugs and cosmetics Act 1940 ன்கீழ் 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரி மருந்து தயாரிக்க சட்டப்படி உரிமம் பெற்ற பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமாகும். 2, 3 எதிரிகள் அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் ஆவர். 4ம் எதிரி அன்றாட வியாபார அலுவலை கவனிக்கக்கூடிய

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:20 +0530

பொறுப்புடைய நபர் ஆவார். குறிப்பாக, 2ம் எதிரி Quality Assurance Manager ஆக அந்த நிறுவனத்தில் பொறுப்பில் இருந்துள்ளார் என குறிப்பிட்டு மருந்து ஆய்வாளர் 16.07.2021 இல் M/s Cinnammal Drug Traders முகவரி No:3-2 Ramamada Street, Thiruthuraipoondi இல் ஆய்வு மேற்கொண்டபோது மருந்து மாதிரி எடுக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டதில் Assay test of Pepsin content மேற்கொண்டபோது அந்த மருந்தில் நோயாளிகளுக்கு எந்த நிவாரணத்தையும் கொடுக்காது. அதில் குறிப்பிட்டுள்ளபடி மருந்து தயாரிக்கப்படவில்லை என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.1) அதில் 2ம் எதிரி நிர்வாக இயக்குநராக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவுரையில் 2ம் எதிரி 09.10.2016 அன்று அவரது பதவியை விலகியது தொடர்பான 09.10.2016 தேதியிட்ட கடிதத்தின் நகல், விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான 10.10.2016 தேதியிட்ட கடிதத்தின் நகல் 2வது எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அரசுத்தரப்பில் புகாருடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் Memorandum and Article of Association of SKYMAP Pharmaceutical Pvt.Ltd இல் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் 2ம் எதிரி சேர்க்கப்பட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:25 +0530

4.2) ஆனால், அவர் உரிய முறையில் நிறுவனத்தில் ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளார் என்பதும், அந்த கடிதம் 1வது எதிரியான மருந்து நிறுவனத்தால் ஏற்கப்பட்டும், (Ministry of Corporate Affairs அல் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டும் உள்ளது என்பது 2வது எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களிலிருந்து தெரியவருவதால் குற்றநிகழ்வு நடந்த காலத்தில் 2வது எதிரி நிர்வாகத்தில் குற்ற நிகழ்வான மருந்து ஆய்விற்கு எடுத்துக்கொண்டு 16.07.2021 இல் 1வது எதிரியான மருந்து நிறுவனத்தில் இயக்குநராக இல்லை என்பது நிரூபணமாகிறது. ஆகவே, மனுவுரையில் கூறியுள்ளவாறு 2வது எதிரியை இவ்வழக்கு விசாரணையிலிருந்து நீக்கரவு செய்வது சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு 2வது எதிரியை இவ்வழக்கு விசாரணையிலிருந்து நீக்கரவு செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.06.09 17:59:31 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னால் என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

I. **2 வது எதிரி தரப்புச் சாட்சிகள், சான்றாவணங்கள் - -** இல்லை

II. **அரசு தரப்புச் சாட்சிகள், சான்றாவணங்கள் -** இல்லை

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.09 17:59:41 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.